ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1950/41 – 2016 ජනවාරි 20 වැනි බදාදා – 2016.01.20
*1950/41 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

5 ஆம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி பொத்துபிட்டிய பொலிஸ் காவல் நிலையத்தை அமைப்பதற்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படு மென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் பதில் காணி அமைச்சர் விஜேசுந்தர முதியன்சேலாகே திலக்கரத்ன பண்டார ஏக்கநாயக்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கலவான பிரதேச செயலாளர் பிரிவில், குக்குலு கோரளையில் உடபத்துவை சிறுபிரிவில், பொத்துபிட்டிய என்னும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2014.11.07 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆர்/கேஎல்டபிள்யு/2014/778ஆம் இலக்கம் கொண்ட சுவட்டு வரைபடத்தில் துண்டு 'ஏ' எனக் குறிப்பிடப்பட்ட சுமார் 0.1075 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் எல்லைகள்:

***மு.கி.ப. 936***

*1.* ***துண்டு 'ஏ' - பொல்கொரட்டுவ - விஸ்தீரணம் : சுமார் 0.1075 ஹெக்டயார்***

வடக்கு : வீதி, வீதி (பிரதேச சபை) மற்றும் வீ. ஏ. சமரசிங்ஹ என்பவர் உரிமை கோரும் பொல்கொரட்டுவ காணி ; கிழக்கு : வீ. ஏ. சமரசிங்ஹ, வீ. பியசேன, வீ. ஜே. குமார மற்றும் ஜே. ஜீ. கோதாகொட என்பவர்கள் உரிமை கோரும் பொல்கொரட்டுவ காணி; தெற்கு : வீ. பியசேன, வீ. ஜே. குமார மற்றும் ஜே. ஜீ. கோதாகொட என்பவர்கள் உரிமை கோரும் பொல்கொரட்டுவ காணி மற்றும் வீதி ; மேற்கு : வீதி.

ரீ. பி. ஏக்கநாயக்க,
பதில் காணி அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/04/2014/எல்ஓ/230.
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2015.12.08.

2-144

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.